1978 செப்டம்பர் 13]

குதிரையாறு திட்டம் ஏற்கனவே போடப்பட்ட திட்டம். அதற்காக கடந்த ஆண்டிலே ஏறக்குறைய ரூ. 10,000 ஒதுக்கப் பட்டு அது மீண்டும் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆகவே குதிரையாறு திட்டம் இன்னும் கைவிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா நேரம் முடிவுற்றது. மீதமுள்ள வினாக்களுக்கான விடைகள் நடவடிக்கைக் குறிப்பில் அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

உதகையில் கடிகாரத் தொழிற்சாலை.

*வினா எண். 195— திரு. போ. கோபாலன்:

திரு. என். திட்டப்பா: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உதகையில் எச்.எம்.டி. கடிகார தொழிற்சாலை நிறுவுவது குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:

(அ) ஆம்.

(ஆ) இதன் விளைவாக பெங்களூர் எச்.எம்.டி. நிறுவனத்தின் தொழில் நுணுக்கக் கூட்டுறவுடன் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் கடிகார உறுப்புக்களை ஒன்று இணைத்து ஆண்களுக்கான கைக்கடிகாரத் தொழிற்சாலை ஒன்றை உதகையில் நிறுவ, 16-3-1977 தேதியிட்ட தொழில் துறை அரசாணை எண் 378-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

LEGISLATURE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள்.

*வினா எண் 196— திரு. கே. உச்சி: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள பால் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் எத்தனை?

(ஆ) கூட்டுறவு சங்க அங்கத்தினர்களிடமிருந்து பெறும் பாலின் விலை என்ன?

(இ) சங்கங்கள் விற்பனை செய்யும் பாலின் விலை என்ன?

எண் 195—200 வினாக்களும், அவற்றுக்கான விடைகளும், பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அச்சிடப் பெற்றுள்ளன.